இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 85 – ஒலி : 19 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – ஆவணி 12 – சனிக்கிழமை 29 ஆகஸ்ட் 2026 – சென்னை 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 85 - Issue 19 : Thiruvalluvar Year - 2057 - Aavani 12 - Saturday 29 August 2026 - Chennai 12 Pages ₹ 5.00

## கழக மறுசீரமைப்புக்குழு வழங்கிய பரிந்துரையின் அடிப்படையில் – தொகுதிகள் வாரியாக

# தி.மு.க. மாவட்டக் கழகங்களின் எண்ணிக்கை 110-ஆக உயர்வு!

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

**சென்னை, ஆக.29-**

**கழக மறுசீரமைப்புக்குழு வழங்கிய பரிந்துரையின் அடிப்படையில் - தொகுதிகள் வாரியாக தி.மு.க. மாவட்டக் கழகங்களின் எண்ணிக்கை 110-ஆக உயர்த்தப்படுகிறது என கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.**

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள அறிவிப்பு வருமாறு:-

திராவிட முன்னேற்றக் கழகம் என்ற பேரியக்கம், கொள்கை அமைப்புமுறை செயல்பாடுகள் - உடன்பிறப்புகள் என்ற நான்கு அடிப்படைகளைக் கொண்டு இயங்கும் இயக்கம். இந்நான்கையும் காலங்கள் தோறும் நாம் புதுப்பித்தும், மேன்மைப்படுத்தியும், கூர்தீட்டியும், செழுமைப் படுத்தியும் வந்திருக்கிறோம். இவை அனைத்தும் கோடிக் கணக்கான உடன்பிறப்புகளின் எண்ணங்கள் அடிப்படையில்தான் அமைந்துள்ளன.

அந்த அடிப்படையில், கடந்த 22.8.2026 அன்று நடைபெற்ற கழக தலைமைச் செயற்குழுக் கூட்டத்தில் நிர்வாகச் சீரமைப்புக்குத் தேவையான மிகமுக்கியமான முடிவுகளைத் தீர்மானங்களாக நிறைவேற்றி இருக்கிறோம்.



கழகம் தொடங்கப்பட்ட நாள் முதல், இதுவரையில் 15 முறை கழக அமைப்பு ரீதியாகத் தேர்தல் நடத்தி, நிர்வாகிகளைத் தேர்ந்தெடுத்துள்ளோம். இதன் தொடர்ச்சியாக 16ஆவது கழக அமைப்புத் தேர்தலை நடத்திடவும் - பல்வேறு அமைப்பு ரீதியாக நிர்வாக மாற்றங்கள் மேற்கொள்ளப்படவும் பல தீர்மானங்கள் முன்வைக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளன. அதில் மிக முக்கியமானது மாவட்டக் கழகங்கள் குறித்த தீர்மானமாகும்.

அதில், தற்போதுள்ள மாவட்டக் கழகங்களின் எண்ணிக்கையை 77இலிருந்து 110ஆக அதிகரித்து, எந்தெந்தத் தொகுதிகள் எந்தெந்த மாவட்டங்களில் இடம்பெற வேண்டும் என்பதை வரையறுப்பதற்கான அதிகாரம் கழகத் தலைவரான எனக்கு வழங்கப்பட்டது.

### சோழிங்கநல்லூர் தொகுதி தனி மாவட்டம்!

இதனையடுத்து, கழக மறுசீரமைப்புக் குழு வழங்கிய பரிந்துரைகளின் அடிப்படையில், கழக முன்னணியினருடன் கலந்தாலோசித்து, தமிழ்நாட்டில் உள்ள தொகுதிகளை 110 மாவட்டங்களாகப் பகுத்து அறிவிக்கிறேன். அதில், அதிகமான மக்கள் தொகை இருப்பதன் காரணமாகச் சோழிங்கநல்லூர் தொகுதி மட்டும் தனி மாவட்டமாக அறிவிக்கப்படுகிறது.

### கழக மறுசீரமைப்பு

#### 1.கன்னியாகுமரி

| வ.எண். | மாவட்டம் | தொகுதிகள் |
|---|---|---|
| 1 | கன்னியாகுமரி கிழக்கு | கன்னியாகுமரி, நாகர்கோவில் |
| 2 | கன்னியாகுமரி தெற்கு | குளச்சல், கிள்ளியூர் |
| 3 | கன்னியாகுமரி வடக்கு | பத்மநாபபுரம், விளவங்கோடு |

#### 2.திருநெல்வேலி

| வ.எண். | மாவட்டம் | தொகுதிகள் |
|---|---|---|
| 4 | திருநெல்வேலி வடக்கு | திருநெல்வேலி, அம்பாசமுத்திரம், |
| 5 | திருநெல்வேலி தெற்கு | பாளையங்கோட்டை நாங்குநேரி, இராதாபுரம் |

#### 3.தூத்துக்குடி

| வ.எண். | மாவட்டம் | தொகுதிகள் |
|---|---|---|
| 6 | தூத்துக்குடி தெற்கு | திருச்செந்தூர், திருவைகுண்டம் |
| 7 | தூத்துக்குடி மத்திய | தூத்துக்குடி, ஒட்டப்பிடாரம் (தனி) |
| 8 | தூத்துக்குடி வடக்கு | விளாத்திக்குளம், கோவில்பட்டி |

#### 4.தென்காசி

| வ.எண். | மாவட்டம் | தொகுதிகள் |
|---|---|---|
| 9 | தென்காசி கிழக்கு | சங்கரன்கோவில் (தனி), தென்காசி, ஆலங்குளம் |
| 10 | தென்காசி மேற்கு | வாசுதேவநல்லூர் (தனி), கடையநல்லூர் |

#### 5.விருதுநகர்

| வ.எண். | மாவட்டம் | தொகுதிகள் |
|---|---|---|
| 11 | விருதுநகர் வடக்கு | சிவகாசி, விருதுநகர், திருச்சுழி |
| 12 | விருதுநகர் கிழக்கு | சாத்தூர், அருப்புக்கோட்டை |
| 13 | விருதுநகர் மேற்கு | இராஜபாளையம், திருவில்லிப்புத்தூர் (தனி) |

#### 6.சிவகங்கை

| வ.எண். | மாவட்டம் | தொகுதிகள் |
|---|---|---|
| 14 | சிவகங்கை தெற்கு | சிவகங்கை, மானாமதுரை (தனி) |
| 15 | சிவகங்கை வடக்கு | காரைக்குடி, திருப்பத்தூர் |

#### 7.இராமநாதபுரம்

| வ.எண். | மாவட்டம் | தொகுதிகள் |
|---|---|---|
| 16 | இராமநாதபுரம் கிழக்கு | இராமநாதபுரம், திருவாடானை |
| 17 | இராமநாதபுரம் மேற்கு | பரமக்குடி (தனி), முதுகுளத்தூர் |

#### 8.தேனி

| வ.எண். | மாவட்டம் | தொகுதிகள் |
|---|---|---|
| 18 | தேனி வடக்கு | பெரியகுளம் (தனி), போடிநாயக்கனூர் |
| 19 | தேனி தெற்கு | ஆண்டிப்பட்டி, கம்பம் |

#### 9.திண்டுக்கல்

| வ.எண். | மாவட்டம் | தொகுதிகள் |
|---|---|---|
| 20 | திண்டுக்கல் கிழக்கு | நத்தம், திண்டுக்கல் |
| 21 | திண்டுக்கல் மத்திய | ஆத்தூர், நிலக்கோட்டை (தனி) |
| 22 | திண்டுக்கல் மேற்கு | பழனி, ஒட்டன்சத்திரம், வேடசந்தூர் |

#### 10.மதுரை

| வ.எண். | மாவட்டம் | தொகுதிகள் |
|---|---|---|
| 23 | மதுரை தெற்கு | திருப்பரங்குன்றம், திருமங்கலம் |
| 24 | மதுரை மேற்கு | சோழவந்தான் (தனி), உசிலம்பட்டி |
| 25 | மதுரை கிழக்கு | மேலூர், மதுரை கிழக்கு |
| 26 | மதுரை வடக்கு | மதுரை வடக்கு, மதுரை தெற்கு |
| 27 | மதுரை மத்திய | மதுரை மத்திய, மதுரை மேற்கு |

#### 11.நீலகிரி

| வ.எண். | மாவட்டம் | தொகுதிகள் |
|---|---|---|
| 28 | நீலகிரி | உதகமண்டலம், கூடலூர் (தனி), குன்னூர் |

#### 12.ஈரோடு

| வ.எண். | மாவட்டம் | தொகுதிகள் |
|---|---|---|
| 29 | ஈரோடு கிழக்கு | ஈரோடு கிழக்கு, மொடக்குறிச்சி |
| 30 | ஈரோடு மத்திய | ஈரோடு மேற்கு, பெருந்துறை |
| 31 | ஈரோடு வடக்கு | பவானி, அந்தியூர் |
| 32 | ஈரோடு மேற்கு | கோபிசெட்டிபாளையம், பவானிசாகர் (தனி) |

#### 13.திருப்பூர்

| வ.எண். | மாவட்டம் | தொகுதிகள் |
|---|---|---|
| 33 | திருப்பூர் மத்திய | திருப்பூர் தெற்கு, திருப்பூர் வடக்கு |
| 34 | திருப்பூர் கிழக்கு | தாராபுரம் (தனி), காங்கேயம் |
| 35 | திருப்பூர் வடக்கு | அவினாசி (தனி), பல்லடம் |
| 36 | திருப்பூர் தெற்கு | உடுமலைப்பேட்டை, மடத்துக்குளம் |

#### 14.கோவை

| வ.எண். | மாவட்டம் | தொகுதிகள் |
|---|---|---|
| 37 | கோவை தெற்கு | பொள்ளாச்சி, வால்பாறை (தனி) |
| 38 | கோவை மேற்கு | தொண்டாமுத்தூர், கிணத்துக்கடவு |
| 39 | கோவை கிழக்கு | சூலூர், சிங்காநல்லூர் |
| 40 | கோவை மத்திய | கோவை வடக்கு, கோவை தெற்கு |
| 41 | கோவை வடக்கு | மேட்டுப்பாளையம், கவுண்டம்பாளையம் |

#### 15.கிருஷ்ணகிரி

| வ.எண். | மாவட்டம் | தொகுதிகள் |
|---|---|---|
| 42 | கிருஷ்ணகிரி கிழக்கு | ஊத்தங்கரை (தனி), பர்கூர் |
| 43 | கிருஷ்ணகிரி மத்திய | கிருஷ்ணகிரி, வேப்பனஹள்ளி |
| 44 | கிருஷ்ணகிரி மேற்கு | ஓசூர், தளி |

#### 16.தருமபுரி

| வ.எண். | மாவட்டம் | தொகுதிகள் |
|---|---|---|
| 45 | தருமபுரி மேற்கு | பென்னாகரம், தருமபுரி, பாலக்கோடு |
| 46 | தருமபுரி கிழக்கு | பாப்பிரெட்டிப்பட்டி, அரூர் (தனி) |

#### 17.நாமக்கல்

| வ.எண். | மாவட்டம் | தொகுதிகள் |
|---|---|---|
| 47 | நாமக்கல் மேற்கு | திருச்செங்கோடு, குமாரபாளையம் |
| 48 | நாமக்கல் கிழக்கு | சேந்தமங்கலம் (ப.கு), இராசிபுரம் (தனி) |
| 49 | நாமக்கல் மத்திய | நாமக்கல், பரமத்தி வேலூர் |

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்